விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 139 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 23 திங்கட்கிழமை (06.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

**மருத்துவ உபகரணங்களுக்கு கடும் தட்டுப்பாடு**
அரச மருந்தாளர்கள் சங்கம்
14ஆம் பக்கம் பார்க்க

**ஜனாதிபதித் தேர்தலில் சீனா கருத்துக் கணிப்பு?**

கசிவடைந்த தகவல்
3ஆம் பக்கம் பார்க்க

**இந்தியாவின் பங்களிப்போடு யாழ். விமான நிலையம் அபிவிருத்தி**


விமான சேவைகள் அமைச்சு
6ஆம் பக்கம் பார்க்க

**வாழ்த்துகின்றோம்**

இன்று ஆரம்பமாகும் க.பொ.த சா.தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றோம்
வலம்புரி கல்விப் பிரிவு

## இலங்கை - ஐக்கிய இராச்சியம் நாளை மூலோபாய கலந்துரையாடல்
### முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆய்வு

(கொழும்பு)
இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையிலான மூலோபாய கலந்துரையாடலின் இரண்டாவது கூட்டம் கொழும்பில் நாளை நடைபெறவுள்ளது.
இந்த கலந்துரையாடலில் வெளிநாட்டு மற்றும் பாது காப்புக் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், வர்த்தகம், முத 04

## தெல்லிப்பழையில் பெற்ற தாயைக் கொன்ற மகன்

- மொபைல் கேம்ஸுக்கு அடிமையானவர்
- பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

(தெல்லிப்பழை)
தெல்லிப்பழையில் பெற்ற தாயைக் கொன்ற க.பொ.த சாதாரண தரத்தில் கற்கும் 16 வயதுச் சிறுவன் மொபைல் கேம்ஸுக்கு அடிமையானவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர், சிறுவர்களிடம் கைபேசிகளை வழங்குவதன் காரணமாக பல்வேறு வகையான பிரச்சினைகளை 15

## கஞ்சாவை சட்டபூர்வமாக்குக
### பத்தரமுல்லை சௌரதன தேரர்

(கொழும்பு)
யுக்திய நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள் நிலையில் கஞ்சா பாவனையை சட்டபூர்வமாக்குவதற்கு முன்னுரிமை வழங்குமாறு கோரிக்கை விடுப்பதாக ஜனசேத பெரமுனவின் தலைவர் பத்தரமுல்லை சௌரதன தேரர் தெரிவித்துள்ளார்.
குறித்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கத் திடம் முறையான கோரிக்கையை 15

## 2025ஆம் ஆண்டில் புதிய வரிகள் அறிமுகம்
### அறிக்கையிடுகிறது மத்திய வங்கி

(கொழும்பு)
வரிகளை வசூலிப்பதற்காக அடுத்த ஆண்டு சொத்து வரி, பரிசு மற்றும் பரம்பரை வரியை அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
மேலும் வருவாய் நிர்வாக நடவடிக்கை 15

## சா.தரப் பரீட்சைகள் இன்று ஆரம்பம்
### உடற்பரிசோதனையும் நடக்கும்

(கொழும்பு)
நாடளாவியரீதியில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகின்றன.
இது தொடர்பிலான தெளிவூட்டல்களை இலங்கைப் பரீட்சைகள்திணைக் களம் வெளியிட் 15

## கேதீச்சரத்தின் காளாஞ்சி வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)
வரலாற்றுப் பிரசித்தி பெற்றதும் தேவாரப் பாடல் பெற்ற தலமுமான திருக்கேதீச்சரம் ஆலயத்தின் கொடிச்சீலை காளாஞ்சி வழங்கல் நிகழ்வு நேற்று 15

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர்
### பொதுக்குழு அமைக்க முடிவு




(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பிலிருந்து ஒரு வரைப் பொது வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் உள்ள சிவில் சமூக அமைப்புகளுக்கு 04

## சா.த. பரீட்சை 2 ஆயிரம் பொலிஸார் கடமையில்

(கொழும்பு)
க.பொ.த சா/த பரீட்சையின் பாதுகாப்புக்காக 2 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.(ந-7,10)

## கிணற்றுக்குள் தவறிவிழுந்த வயோதிபர் உயிரிழப்பு
### நாகர்கோவிலில் சம்பவம்

(நாகர்கோவில்)
நாகர்கோவில் மேற்கு பகுதியில் கிணற்றுக்குள் தவறி விழுந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இதில் அதே இடத்தைச் சேர்ந்த முருகப்பிள்ளை மயில்வாகனம் (வயது-74) என்பவரே உயிரிழந்தவராவார். 15

## பலத்த காற்றுடன் கடல் கொந்தளிக்கலாம்


(கொழும்பு)
பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
அதன்படி கற்பிட்டியில் இருந்து கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிரதேசங்களில் கடல் 15

## நாகப்பட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவை மே 13இல் ஆரம்பம்
### இந்திய உயர்ஸ்தானிகராலயம்

(கொழும்பு)
இந்தியாவின் நாகப்பட்டினத்துக்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 13 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது.
இந்திய உயர்ஸ்தானிகரகத்தால் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## விநாயகமூர்த்தி பராசக்தி

கொக்குவில் மேற்கு சிவகுரு லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி பராசக்தி அவர்கள் 03.05.2024 கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா - மனோன்மணி தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும் ஞானாம்பிகை, காலஞ்சென்ற கலைவாணி மற்றும் ஞானசூரியன் (லண்டன்), ஞானசம்பந்தன்(சுவிஸ்), ஞானசொரூபன், காலஞ்சென்ற ஞானேஸ்வரன் மற்றும் ஞானகுமார்(சுவிஸ்), ஞானேந்திரன்(உரிமையாளர் - யாழ்ரன் மல்ரி சென்ரர்), ஞானகலை (கனடா), ஞானேஸ்வரி(அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகராஜா, விமலாதேவி, ருசானி, சிவரேகா, ஜெயறமணி, துரைசிங்கம், பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிசானி, சமந்தா, நிலானி, றக்ஷன், நிக்ஷன், மினோஜா, மகனிஹா, விதுஷன், லஷ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற S.R.அன்னலிங்கம் மற்றும் தவமணி காலஞ்சென்றவர்களான S.R.மகாலிங்கம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.05.2024 இன்று திங்கட்கிழமை மு.ப 11.30 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(667)


## விற்பனைக்கு

கடை சுருக்கு கேற் 3, கம்பிக் கேற் 2, நிலை கதவுகள் பல, பழைய கட்டடத்தின் இடிபாட்டு தொகுதிகள், ஓடுகள் உடன் விற்பனைக்கு உண்டு.

(C-0285)

**077 723 2535**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## மணமகன் தேவை

யாழ், கத்தோலிக்க 1989 இல் பிறந்த அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்பு (672)

**077 008 3491**


## மணமகள் தேவை

யாழ், கத்தோலிக்க 1986 இல் பிறந்த தனியார் துறையில் உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(672)

**076 260 5156**


# கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் வீதி அபிவிருத்தித் திணைக்கள பருத்தித்துறை நிறைவேற்று பொறியியலாளர் பணிமனையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய **திரு. லோ.நிரோஜனன்** அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் சிவக்கொழுந்து லோகநாதன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் - வட மாகாணம்**

(0043)

# ஆத்மா சாந்தியடைவதாக

## "காயாமல் நனையாமல் காத்து வளர்த்த தெய்வம்"



## திருமதி விநாயகமூர்த்தி பராசக்தி

ஆயிரம் பிறைகண்ட தாயாக விளங்கி
அத்தனை செல்வங்களையும் பேறாக்கியே
வாயினும் மனத்தும் வாயார வாழ்த்தியும்
வரமெலாம் ஈந்த ஸ்ரீமதி பராசக்தியே,
நோயெலாம் அணுகாத நித்திய கல்யாணியாய்
நெக்குருகுமாறு அறமாற்றிய அன்னை பராசக்தியே
தேயாமல் நாம் வாழ ஓயாமல் விரதமிருந்தாயே
தேசமுள்ளவரை காயாது வாழ வைத்த தெய்வமே!
நீங்கள் சாந்தி அடைவீரகளாக

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
அ.குமாரசாமி குடும்பத்தினர்
கொக்குவில்

(0044, 0045)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சீனா கருத்துக் கணிப்பு செய்ததா?

## கசிவடைந்த தகவல்கள்



(கொழும்பு)

**உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையை வந்தடைந்த சீன துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழு உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் என்பதை நேரடியாக கண்டறியும் நோக்கில் கருத்துக்கணிப்பு ஒன்றை செய்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.**

இதேவேளை இந்தக் கருத்துக்கணிப்பின் தரவுகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான விசேட சந்திப்பின் போது சீன துணை அமைச்சர் சன் ஹையன் தெரியப்படுத்தியுள்ளார். இருவருக்கும் இடையிலான இந்த சந்திப்பு சுமார் 45 மணித்தியாலம் வரை இடம் பெற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் உறுதிப்படுத்தியது.

இலங்கையின் அரசியல் நிலவரங்கள் மற்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்புகள் அதிகம் என்பன தொடர்பில் கொழும்பில் அமைந்துள்ள சீன இராஜதந்திர மையம் ஆய்வு அறிக்கைகளை ஏற்கனவே பீஜிங்கிற்கு அனுப்பியிருந்தது. இவற்றை முழுமையாக அவதானத்திற்கு எடுத்துக்கொண்ட பின்னரே சீன துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழுவினர் கொழும்புக்கு விஜயம் செய்தனர். ஆனால், ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்த தகவல்களை நேரடியாக உறுதிப்படுத்திக்கொள்ள தீர்மானித்திருந்தனர்.

அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் என்பதனைக் கண்டறிய, மக்களை நேரடியாக சந்தித்து கருத்துக்கணிப்பொன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இத்தகைய நடவடிக்கைகள் பொதுவாக இராஜதந்திர அணுகுமுறைகளுக்கு உட்பட்டதல்ல. ஆனாலும் அவ்வாறானதொரு கருத்துக்கணிப்பை மிகவும் இரகசியமாக முன்னெடுக்கத்தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் கம்பஹா மாவட்டத்தின் பியகம தேர்தல் தொகுதியை கொழும்பில் உள்ள சீன இராஜதந்திரிகள் மிகவும் இரகசியமாக தெரிவு செய்திருந்தனர். சீன துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழுவினர் இலங்கை விஜயத்தின்போது, முதலாவதாக பியகம தேர்தல் தொகுதியில் வாக்காளர்களை சந்தித்து கருத்துக்கணிப்பை செய்துள்ளனர். இதன் பின்னரே நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இருதரப்பு சந்திப்புகளில் பங்கேற்றுள்ளனர்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியுடனான இருதரப்பு சந்திப்புக்கு அப்பால் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் சீன துணை அமைச்சர் சன் ஹையனுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது பியகம தேர்தல் தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு தொடர்பில் சீன துணை அமைச்சர் சன் ஹையன், சஜித் பிரேமதாஸவிடம் தகவல் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து இரு நாட்டு உறவுகள், இலங்கைக்கான சீன ஒத்துழைப்புகள், சீன வெளிவிவகார கொள்கைகள் மற்றும் தெற்கு ஆசிய பிராந்தியத்தின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இருவருக்கும் இடையில் பரந்துபட்ட பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. (நி-6)

## இந்திய மக்களவைத் தேர்தல்
### மேற்பார்வை செய்ய இலங்கைக்கு அழைப்பு

(கொழும்பு)

இந்திய மக்களவைத் தேர்தல் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தேர்தல் ஆணையகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் சர்வதேச தேர்தல் பார்வையாளர் நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய தேர்தலொன்று நடைபெறுவதைக் காண்பதற்காக 23 நாடுகளில் உள்ள தேர்தல் முகாமைத்துவ அமைப்புகளுடன் தொடர்புடைய 75 சர்வதேச பார்வையாளர்களுக்கு இந்திய தேர்தல் ஆணையகம் அழைப்பு விடுத்துள்ளது.



மே மாதம் 4 ஆம் திகதி முதல் மே 9 ஆம் திகதி வரை நடைபெறுகின்ற சர்வதேச தேர்தல் பார்வையாளர் நிகழ்ச்சியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 10 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு பங்கேற்கின்றது.

இந்த தூதுக்குழுவில் இலங்கைத் தேர்தல் ஆணைக் குழுவின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் சட்ட சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகளை உருவாக்குவதற்கான குழுவின் 8 பிரதிநிதிகள் உள்ளடங்குகின்றனர்.

இலங்கை தூதுக்குழுவின் பங்கேற்பு இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தேர்தல் நடைமுறைகள் தொடர்பிலான அறிவு மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்குமான முக்கிய தளமாக அமையுமெனவும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (நி-6)

## ரணிலுக்கு பூரண ஆதரவு
### லொஹான் பகிரங்க அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தனது முழுமையான ஆதரவை வழங்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

பொலநறுவை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "என் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு எதிராக செயற்பட்டு வந்தவன், உங்களது அரசாங்கத்தில் அமைச்சராக உங்களுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பு கிடைக்கும் என நான் ஒருபோதும் நம்பவில்லை.

ஆனால் இன்று உங்களது அரசாங்கத்தில் ஒரு இராஜாங்க அமைச்சர் பதவியை வகித்து இந்த நாட்டுக்கு சேவையாற்றும் வாய்ப்பு கிடைத்ததையிட்டு நான் பெருமையடைகிறேன்.



இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அடித்தளமிட்டீர்கள்.

எனவே, இந்த நாட்டை மீண்டும் பொறுப்பேற்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். தனிப்பட்ட முறையில் எனது சிறந்த ஆதரவை உங்களுக்கு வழங்குவேன் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்." என அவர் தெரிவித்தார். (நி-6)


பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
மே, 11,12.2024.
(சி-0283)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித்...

தமிழ் அரசியல் தரப்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது

இக்கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது முதலில் தமிழர் தரப்பிலிருந்து ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது தொடர்பிலும், அவ்வாறு நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன் சில இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டன.

பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் வடக்கு, கிழக்கிலுள்ள சிவில் சமூக அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்தி வருகின்ற அதேவேளையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளும் இதுவரை காலமும் இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் இருந்து வந்தன.

இந்நிலையில் பொது வேட்பாளர் தொடர்பான மேற்படிக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி இணைந்து கொண்டதுடன் அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் கட்சியின் ஏனைய சில முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆனாலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குறித்த கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை. அந்தக் கட்சியினர் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றே தொடர்ந்தும் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இக்கூட்டத்தின்போது தமிழர் தரப்பில் இருந்து ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவதற்குப் பொதுக் குழு ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டது.

இதற்கமைய பொதுக்குழு அமைப்பதற்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இரண்டு வார கால அவகாசம் கோரியிருந்தார். அதனால் பொதுக்குழு அமைப்பதை இரண்டு வார காலத்துக்கு ஒத்திவைத்து கூட்டம் நிறைவடைந்தது. (ந-7,10)


## வீடு வாடகைக்கு தேவை

நல்லூரடி, ஆனைப்பந்தி, கந்தர்மடம், திருநெல்வேலி, வைமன் வீதி, நாவலர் வீதி ஆகிய இடங்களில் வீடு வாடகைக்கு தேவை.

**077 966 9419**

(C-0293)


## நாகப்பட்டினம்...

நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடப்பட்டு இந்திய கப்பல் கூட்டுத்தாபனத்தினால் தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனம் இந்தக் கப்பல் சேவையை முன்னெடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவையை மேலும் இலகுபடுத்துவதற்காக மாதாந்தம் 25 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் ஒரு வருடத்துக்கான செலவை இந்திய அரசாங்கம் ஏற்கும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பதற்காக இந்திய அரசாங்கம் 63.65 அமெரிக்க டொலர் நிதியை இலங்கைக்கு மானிய அடிப்படையில் வழங்கியுள்ளதாக அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7,10)

## இலங்கை...

லீடு, சுற்றுலா, பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இடம்பெயர்வு, கடல்சார் ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்படவுள்ளது.

ஐ.நா சபையின் மற்றும் பொது நலவாயம் உட்பட சர்வதேச அரங்குகளில் இரு நாடுகளின் ஒத்துழைப்பு குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

இந்த நிலையில், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இரண்டாவது மூலோபாய கலந்துரையாடலில், வெளிவிவகார அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் பணிப்பாளர் நாயகம் சோபினி குணசேகர தலைமையில் இலங்கைப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ஐக்கிய இராச்சியத்தின் குழுவுக்கு இந்தியப் பெருங்கடல் மற்றும் வெளிநாட்டு பொதுநல வாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் தலைமையாளர்பென்மெல்ஸ்ர் தலைமை தாங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)


யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அன்னையின்

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 18 - 05 - 1951



மறைவு 04 - 05 - 2024

எமது பாடசாலை
பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும்
பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளருமான

**கலாநிதி பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரன்**

(ஓய்வுபெற்ற புவியியல் பேராசிரியர் - யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்கள் 04.05.2024 அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து மிகுந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-0290) யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைச் சமூகம்

## பணியாளர் தேவை

நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்துக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. சமையலறை உதவியாளர் (மரக்கறி வெட்டுதல் / துப்புரவு செய்தல்)
2. ரொட்டி / தோசை வேலை செய்பவர்கள்
3. உணவு பரிமாறுவோர் / பார்சல் கட்டுபவர் (Waiter)
4. இடியப்பம் / புட்டு செய்யக்கூடியவர்கள்



தங்குமிடம், உணவு வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:- **077 219 0128**

(C-0289)

## கண்ணீர் அஞ்சலி

எனது இனிய நண்பனும்
கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித். ப.மா.சங்க செயலாளரும்
நல்லூர் பிரதேச சபை மு. உறுப்பினருமான
திரு. வி.ஞானேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பராசக்தி விநாயகமூர்த்தி**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

கேணியடி கொக்குவில் மேற்கு,
ஸ்ரீ முருகன் களஞ்சியம்
வட்டுக்கோட்டை. (C-0287)

சி.ஸ்ரீஜீவா
கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்.
ப.மா.சங்க உறுப்பினர்
வலி.மேற்கு பிரதேச சபை மு.உறுப்பினர்

**நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன். காரணம் என்னிடம் அதிகம் இருப்பதால் அல்ல. ஒன்றுமே இல்லாமல் இருப்பவன் வலி புரிந்து கொண்டதால்**

யாழ்.கஸ்தூரியார் வீதியில் 3½ பரப்புக் காணியும், யாழ்.தட்டாதெரு சந்திக்கு அண்மையில் 2 2/2 பரப்புக் காணியும், யாழ்.பிறவுண் வீதியில் 5 பரப்புக் காணியும், யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 52 அடி அகலம் 216 அடி நீளமும் கொண்ட மூன்று கடைகளும், யாழ்.திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் ஆடியபாதம் வீதியில் 5 பரப்புக் காணியும், யாழ்.மின்சார நிலைய வீதிக்கு அண்மையில் பழைய தபாற்கந்தோர் வீதியில் 4½ பரப்புக் காணியும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நமசிவாயம் பாடசாலைக்கு முன்பாக 5 பரப்புக் காணியும், யாழ்.கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும், யாழ்.பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்பில் அமைந்த மாடி வீடும், கொழும்பு விவேகாநந்தா வீதியில் 6 பேர்ச்சில் அமைந்த மாடி வீடும், யாழ்.மின்சார நிலைய வீதியில் 3 பரப்பு, 4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. மன்னார் நகருக்கு அருகில் அதிநவீன அரிசி ஆலையும் விற்பனைக்கு உண்டு.

(C-0284) இல.187, காலி வீதி, வெள்ளவத்தை. | கனகசபை தர்மகுலசிங்கம் : 0777 232 535 | இல.185, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025

## வருமானம் நன்றாக இருக்கும்



**சுக்கிரனை ராசிநாதனாகக் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே!**

நீங்கள் வசீகரமாக பேசுவதில் வல்லவர். கிரகநிலை: விரய ஸ்தானத்தில் இருந்து ராசி ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களது பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானம் - சப்தம ஸ்தானம் - பாக்கிய ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்திஸ் ரீகுரோதி வருஷம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கிலத் திகதி 01.05.2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன் கிழமையும் - திருவோண நட்சத்திரமும் சுப நாமயோகமும், பவ கரணமும். சித்தயோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில மாலை 5.01 இற்கு துலாம் லக்னத்தில் குரு பகவான் மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு மாறுகிறார்.


**ரிஷபம் ராசியினருக்கான குருப் பெயர்ச்சி பலன்கள்**

இந்தக் குரு பெயர்ச்சியால் உங்களின் செய்தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். செல்வவளம் பெருகும். உங்கள் செல்வாக்கு உயரும். உங்களின் பெயரும், புகழும், அந்தஸ்தும் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் எதிர்பார்த்த வெற்றியை அடைவீர்கள். வழக்கு விடயங்களில் வெற்றி உண்டாகும். அனைவரிடமும் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்வீர்கள். பெரியோரிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட கவலைகள் நீங்கும். மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீண்டு விடுவார்கள். அசையும், அசையாச்சொத்துக்களின் சேர்க்கை உண்டாகும். உங்களின் எண்ணாங்களில் ஏற்பட்ட தடுமாற்றம் நீங்கும். மனக்குழப்பம் நீங்கி தெளிவுடன் காணப்படுவீர்கள். உங்களின் தேகத்தில் புதிய பொலிவு உண்டாகும். உங்களின் நகைச்சுவை உணர்வு அதிகரிக்கும். விலகிச் சென்றிருந்த உறவினர்கள் மீண்டும் வந்து இணைவார்கள்.

வருமானம் இரட்டிப்பாகும். பழைய கடன்களை வட்டியும் முதலுமாக திருப்பிச் செலுத்துவீர்கள். குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் பாகப்பிரிவினை உண்டாகி உங்களுக்கு உரிய பங்கு கிடைத்துவிடும். அதோடு கொடுத்த வாக்குறுதியை எப்பாடுபட்டாவது காப்பாற்றி புகழடையும் காலகட்டம் இது வென்றால் மிகையில்லை. நண்பர்களுடன் இணக்கமாகச் செயற்படுவீர்கள். வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் கை வந்து சேரும். உங்களைப் பற்றிய தவறான அபிப்பிராயங்களை நண்பர்கள் மறந்து விடுவார்கள். அதேநேரம் சில அநாவசிய செலவுகளையும் செய்ய நேரிடும்.

குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவற்றை பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டுத் தீர்த்துக் கொள்வீர்கள். உங்களுக்கென்று தனி பாணியை அமைத்துக்கொண்டு செயற்படுவீர்கள். திட்டமிட்ட காரியங்களில் சில தடுமாற்றங்கள் ஏற்பட்டாலும் நஷ்டங்கள் ஏற்படாமல் தப்பித்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் நிம்மதி நிலவும். உற்றார் உறவினர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். செய்தொழிலில் மாற்றம் செய்ய நினைக்கும்போது முன்கூட்டியே கூட்டாளிகளுடன் விவாதித்து சுமுகமான நிலைமையை ஏற்படுத்திக்கொள்வீர்கள். உடல் ஆரோக்கியம் சீராக இருந்தாலும் அவ்வப்போது உஷ்ணம் சம்பந்தமான உபாதைகளுக்கு ஆளாவீர்கள். எனவே கவனம் தேவை.

நண்பர்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை நடுநிலையோடு இருந்து தீர்ப்பீர்கள். அதோடு தீயோரின் நட்பை யும் தவிர்ப்பது நல்லது. இதனால் தேவையற்ற சூழ்நிலைகளையும் தவிர்க்கலாம். இந்தக் காலகட்டத்தில் எவருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். உங்களின் பெயரில் பணம் வாங்கித் தரவும் வேண்டாம். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகப் பணிகள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். எதிர்வரும் இடையூறுகளை சாதுர்யத்துடன் சமாளிப்பீர்கள். உங்களிடம் மேலதிகாரிகள் நட்புடன் நடந்து கொள்வார்கள். உங்களுக்கு சிறு தொல்லைகள் கொடுத்து




வந்த சக ஊழியர்கள் அடங்கிவிடுவார்கள். பணவரவிற்கு எந்தக் குறைவும் இருக்காது.

வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சீராக இருந்தாலும் கூடுதல் அக்கறையோடு வியாபாரம் செய்யவும். சில நேரங்களில் கடும் போட்டிகளை சந்திக்க நேரிடும். இதனால் மறைமுக எதிர்ப்புகளையும் சமாளிக்க வேண்டிவரும். எதிலும் விழிப்புடன் இருப்பது நல்லது. நன்கு ஆலோசித்த பிறகே புதிய முதலீடுகளைச் செய்யவும். கால்நடைகளால் நன்மைகள் உண்டாகும். புதிய குத்தகைகளை நாடிச் செல்ல வேண்டாம். நெல்விளைச்சல் சாதகமாக இருக்கும்.

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்:** இந்த குருப் பெயர்ச்சியின் மூலம் பொருட்களின் விற்பனை மிகவும் நன்றாகவே இருக்கும். உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மிகப் பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு மேலிடத்திலிருந்து உங்களுக்கு சந்தோஷமான செய்திகள் வந்து சேரும். படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். வருமானம் நன்றாக இருக்கும். செலவும் அதிகமாகும். சக ஊழியர்களால் நன்மை அடைவீர்கள். புதிய வாகன ங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும். வாழ்க்கையில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் உழைப்பது அவசியம்.

**ரோகினி:** இந்த பெயர்ச்சியின் மூலம் வாகனங்களை உபயோகப்படுத்தும் போது கவனம் தேவை. பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளை செய்து பக்குவமான அணுகுமுறையை கையாள்வது அவசியம். பணவரவு அதிகரிக்கும். காரிய தடங்கல்கள் ஏற்படலாம். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்புக் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான விடயங்கள் சாதகமாக நடக்கும். நயமாக பேசுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது.

**மிருகசீரிடம் - 1,2 பாதங்கள்**

இந்த குரு பெயர்ச்சியின் மூலம் வேலை பார்க்கும் இடத்தில் பொருள்களை கவனமாக பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கிடையே உறவு பலப்படும். பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றை செய்வீர்கள். மனதில் ஏதாவது கவலை இருந்து வரும். இஷ்ட தெய்வத்தை வழிபட கவலை குறையும். ஆன்மீக நாட்டத்தை அதிகரித்துக் கொள்வதன் மூலம் மன நிம்மதி ஏற்படும். உழைப்பிற்கான அங்கீகாரம் கிடைக்கும். மனதுக்கு சந்தோஷமான காரியங்கள் நடக்கும்.

**சிறப்பு பரிகாரம்:** மல்லிகையை கட்டி அருகிலிருக்கும் அம்மன் கோவிலுக்கு அர்ப்பணித்து அர்ச்சனை செய்து வணங்கவும்.

**சொல்ல வேண்டிய மந்திரம்:** "ஓம் ஸ்ரீமாத்ரே நமஹ" என்ற மந்திரத்தை தினமும் 9 முறை சொல்லவும். **அதிர்ஷ்ட எண்கள்:** 2, 6, 9. அதிஷ்ட ஹோரைகள்: சந்திரன், செவ்வாய், சுக்கிரன், குரு.

**அதிஷ்ட திசைகள்:** கிழக்கு, வடக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி.

(தொடரும்)

# இராசிபலன்

06.05. 2024
சித்திரை 23, திங்கட்கிழமை
திரயோதசி பிற்பகல் 01.30 மணிவரை

ரேவதி பிற்பகல் 04.46 மணிவரை
சுபநேரம் 11.56-01.26 மணிவரை
இராகுகாலம் 7.26-8.56 மணிவரை

சந்திராஷ்டமம்
ஆயிலியம், மகம்


**வளவன்**




தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தேவையற்ற மனக்குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது.




தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.





மனநிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும் , மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.




விரத வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.




தொழில் ரீதியான சில குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை.





கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




நீண்டநாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செய்தொழில் மேன்மையுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.





காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேர்லாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.





தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், தொழில் ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள்.




வழிபாடு ஆனந்தம் தரும், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

கண்களால் கற்றுக் கொள்வதைவிட காதுகளால் கற்பதே அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.விமானநிலைய அபிவிருத்தியை இந்தியாவுடன் முன்னெடுக்க தீர்மானம்

## விமான சேவைகள் அமைச்சு

**(கொழும்பு)**

**யாழ்.சர்வதேச விமான நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.**




யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்ததாக அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ் ருவன்சந்திர குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ஒரேயொரு முன்மொழிவு மாத்திரமே கிடைக்கப்பெற்றதாக அவர் கூறினார்.

இதன் காரணமாக யாழ். சர்வதேச விமான நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய விரைவில் இதற்கான யோசனை தயாரிக்கப்படவுள்ளது.

இதனிடையே, எதிர்வரும் ஜுலை மாதம் முதல் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து எயார் இன்டிகோ விமான சேவை நிறுவனமும் விமானப் பயணங்களை முன்னெடுக்கவுள்ளது.

தற்போது எயார் எலையன்ஸ் விமான சேவை நிறுவனம் மாத்திரம் விமான சேவைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பாக்ஜலசந்தி கடற்பரப்பை கடந்து சாதனை



(மன்னார்)

இலங்கை தலை மன்னாரி லிருந்து தனுஷ்கோடி வரை பாக்ஜலசந்தி கடலை 10 மணிநேரம் 10 நிமிடங்களில் 12 நீச்சல் வீரர்கள், வீராங்கனைகள் தொடர் ஓட்ட முறையில் நீந்தி சாதனை படைத்தனர்.

மகாராஷ்ட்ரா மாநிலம் தானே பகுதியில் செயற்பட்டு வரும் ராம் சேது திறந்த நீர் நீச்சல் அறக்கட்டளையை சேர்ந்த மகாராஷ்ட்ரா மாநிலத்தை சேர்ந்த 12 நீச்சல் வீராங்கனைகள் இரண்டு குழுக்களாக பிரிந்து இலங்கை தலை மன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரை உள்ள சுமார் 30 கி.மீ தொலைவி லான பாக்ஜலசந்தி கடற்பரப்பினை நீந்தி கடப்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை, இலங்கை தூதரகம் மற்றும் பாதுகாப்புதுறை அமைச்சகத்திற்கு அனுமதி கோரியிருந்தனர்.

இந்திய இலங்கை இரு நாட்டு அனுமதியும் கிடைத்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ராமேஸ்வரம் மீன்பிடி இறங்குதளத்திலிருந்து இரண்டு படகுகளில் தங்கள் நீச்சல் பயிற்சியாளர் தலைமையில் மீனவர்கள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவினர் இலங்கை தலை மன்னார் சென்றனர்.

தலைமன்னாரிலிருந்து நேற்று முன்தினம் காலை 6.30 மணிக்கு கடலில் குதித்து தொடர் ஓட்ட முறையில் நீந்தத் தொடங்கி 12 பேரும் மாலை 4.40 மணியளவில் (10 மணி நேரம் 10 நிமிடங்களில் நீந்தி) தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியை வந்தடைந்தனர்.

நீந்தி சாதனை படைத்தவர் களை சுங்கத்துறை, மரைன் பொலிஸார், சுற்றுலாப் பயணிகள் அரிச்சல் முனையில் வரவேற்று கௌரவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(நி-6-285)

## மருத்துவமனை உத்தியோகஸ்தர் மீது தாக்குதல் -பணியாளர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மேல் நிலை உத்தியோகத்தர் ஒருவரை மருத்துவமனையில் கடமை நேரத்தில் வைத்து தாக்கிய குற்றச் சாட்டில் அங்கு கடமையாற் றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்க ளுக்கு முன்னர் குறித்த மருத்துவமனையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தனக்கு கிடைக்க வேண்டிய சம்பளம் மற்றும் மேலதிக நேரக்கொடுப்பனவு ஆகியன கிடைக்கவில்லை என சம்பந்தப்பட்ட மேலதிகாரியை வினவிய நிலையில் திடீரென மேலதிகாரி மீது தாக்குதலும் நடத்தியுள்ளார்.

இதில் பாதிக்கப்பட்ட மேல் நிலை உத்தியோ கத்தர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்த நிலையில் பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து சம்பந்தப்பட்ட தாதிய உத்தியோகத்தரை கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவகாமி அம்பாள் திருக்கோயில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் உற்சவங்கள் இடம் பெறும்.

இவ் உற்சவங்களில் எதிர் வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 7.30 மணிக்கு கொடியிறக்கத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (நி-6)

## உதைபந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் கீரிமலை சிவானந்தா விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட "யாழின் துருவம்" கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத்தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை 3.45 மணிக்கு வலிகாமம் துணவி சென்நியூஸ்ரார் அணியை எதிர்த்து வடமராட்சி அண்ணாசிலையடி இளைஞர் அணியும் மாலை 4.45 மணிக்கு இளவாளை யங்கென்றீஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணியும் மோதவுள்ளன. (நி-6-90)

## முள்ளிவாய்க்கால் நினைவாக யாழில் கஞ்சி வழங்கி வைப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவாக கஞ்சி வழ[illegible]

இறுதி யுத்தத்தின்போது மக்களின் உணவாக கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டது. அதன் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இனிமேல் இவ்வாறு ஒரு அவலம் ஏற்படாது இருப்பதை உறுதிப்படுத்தவும் இந்நிகழ்வு நடைபெற்றதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வருடத்தில் 1,700 குழந்தைகள் இலங்கையில் தத்துக்கொடுக்கப்படுகின்றன

## பதிவாளர் திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக குழந்தைகளை தத்துக்கொடுக்கும் வீதம் அதிகரித்துள்ளதாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஒரு வருடத்தில் சராசரியாக சுமார் 1,700 குழந்தைகள் தத்துக்கொடுக்கப்படுவதாக பதிவாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் தெரிவித்தார்.

அதிகளவான குழந்தைகள் வெளிநாட்டவர்களுக்கு தத்துக்கொடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் குழந்தைகளை வேறு நபர்களிடம் தத்துக்கொடுக்கும்போது அது குறித்து பதிவாளர் திணைக்களத்துக்கு தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளன.

பொருளாதாரச் சிக்கல்கள், திருமணத்துக்குப் புறம்பான உறவுகள் போன்ற சமூகப் பிரச்சினைகளினாலே குழந்தைகளைப் பிறருக்கு தத்துக் கொடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் கருக்கலைப்புச் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு பாராட்டு

(கொழும்பு)

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவாவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜோர்ஜியாவில் இடம்பெற்றுவரும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57 ஆவது வருடாந்திர மாநாட்டில் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பங்கேற்றுள்ளார்.

அதன்போது இடம்பெற்ற இந்த சந்திப்பில் தற்போதைய பொருளாதாரம் மற்றும் செயற்திட்டத்தின் நிலையான முன்னேற்றத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் இலங்கைக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிலையான உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தியதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி-6)

லங்கா மஹறால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெறுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974
(154)

விசேட சிகிச்சைகள்
நாட்பட்ட கழுத்து,இடுப்பு,முழங்கால், குதி வலிகள், முள்ளந்தண்டு விலகல், Rheumatic Arteries, குழந்தையின்மை, கருப்பை கோளாறுகள்,பக்கவாத Rehab சிகிச்சைகள்,உடல் எடை குறைப்பு, ஈரல், சிறுநீரக,சுவாச,இருதய கோளாறுகள், கைகள்/கால்கள் விறைப்பு,பாத வலி.
சந்திப்பு,ஆலோசனை இலவசம்!
சித்த, ஆயுர்,மாற்றுவழி,இயற்கை எண்ணெய், யோகா சிகிச்சைகள்.
பக்க விளைவுகள் இல்லை.
வைத்தியர். இரா.சிவகுருநாதன்(SLAMC பதிவு பெற்ற வைத்தியர்)
இல.54,33ஆவது ஒழுங்கை,வெள்ளவத்தை, நல்லூர் யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 0777 301 669

மக்கள் வங்கி
பிராந்திய தலைமைக் காரியாலயம்- யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 28.2.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 13.06.2024 ஆம் திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை நிகழும் தினங்கள்-14.06.2024 மற்றும் 15.06.2024

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ். ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்./ பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/ பல்கலைக் கழகம், யாழ்./கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில்(நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை,உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி. |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர் பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 222 2601

(சி-0281)
PEOPLE'S BANK

செல்வம் பொங்கிடும் அட்ஷய திருதியை நன்னாளில்
சகல சௌபாக்கியங்களும் பெற்று தரும் விசேஷ தினத்தில்
எங்களுடன் கொண்டாட பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களை
அகமகிழ்வுடன் அழைக்கின்றோம்.
மயூரன்ஸ் நகைமாளிகை
அட்ஷய திருதியை தினமாகிய
10.05.2024 அன்று
சிறப்பு விலைக் கழிவுகளும்
பெறுமதிமிக்க பரிசில்களும்
உங்களுக்காக
காத்திருக்கின்றன என்பதை
அறியத் தருவதையிட்டு அக
மகிழ்கிறோம்.






இல. 07, கஸ்தூரியார் வீதி,
T.P.: 021 222 3015, 077 651 0251.
(சி-0282)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட மராட்டிய பழங்குடியின பெண்கள்



(டில்லி)

மராட்டிய மாநிலத்தில் கட்சிரோலி என்ற பகுதியில் பர்சேவாடா எனும் குக்கிராமத்தில் பழங்குடியின பெண்கள் 2 பேர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜம்னி தெலமி (வயது 52), தேவு அட்லமி (57) ஆகிய 2 பேரும் மாந்திரிகம் செய்வதாக அந்த கிராம பஞ்சாயத்தில் அறிவிக்கப்பட்டதையடுத்து 2 பெண்களும் 3 மணி நேரம் சித்திரவதை செய்யப்பட்டு 1 கிலோமீற்றர் தூரத்துக்கு காட்டுக்குள் இழுத்து செல்லப்பட்டு உயிரோடு எரித்து கொல்லப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் உயிரோடு எரிக்கப்பட்ட பெண்ணான ஜம்னி தெலமி கணவர் திவாகர் மகன் தேவாஜி ஆகியோரும் உள்ளடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தேடப்படுவோர் பட்டி

# தந்திரமாக காய் ந



(கீவ்)

**ரஷ்யா, உக்ரைன் ஜன**

**ஜெலன்ஸ்கிக்கு எதிராக வழக்கு**

**தேடப்படுவோர் பட்டியலில்**

**வெளியாகியுள்ளது.**

இது தொடர்பில் சர்வதேச ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், ரஷ்யாவின் உள்துறை அமைச்சரின் தகவலின் படி ரஷ்யாவின் தேடப்படுவோர் பட்டியலில் உக்ரைன் ஜனாதிபதி சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில் ரஷ்ய - உக்ரைன் போர் ஆரம்பித்ததில் இருந்து உக்ரைன் மக்கள் உட்பட பல ஐரோப்பிய அரசியல்வாதிகளுக்கும் எதிராக ரஷ்யா பிடியாணை பிறப்பித்துள்ளது.

அத்தோடு, கடந்த ஆண்டு சர்வதேச நீதிம

## பிரேசிலில் தொடரும் புயலுடன் மழை 57 பேர் உயிரிழப்பு



(பிரேசில்)

பிரேசிலில் பெய்து வரும் வரலாறு காணாத மழையினால் 57 பேர் உயிரிழந்துள்ளதுடன் 74 பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்த அனர்த்தத்தில் 69 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீடுகளை இழந்துள்ள பலர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரேசிலின் தெற்கு நகரமான ரியோ கிராண்ட் டு சூல் பகுதியில் தொடர் மழை பெய்தது.

உருகுவே, அர்ஜென்டினாவின் எல்லை நகரங்களும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலில் 80 ஆண்டு கால வரலாற்றில் இல்லாதளவில் புயலுடன் மழை பெய்து வருவதால் பாதிப்பின் தாக்கம் அதிகரித்துள்ளது.

போர்ட்டோ அழகர் பகுதியில் குளம் உடைந்ததில் வீதிகள் முழுவதும் வெள்ளநீரால் மூழ்கியுள்ளது.

இங்குள்ள சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளதுடன், மீட்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



# தொடரும் பாலஸ்தீ

# சுமார் 2 ஆயிர

(வோஷிங்டன்)

அமெரிக்க பல்கலைக்கழகங்களில் முன்னெடுத்து வரும் பாலஸ்தீன ஆதரவுப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மாணவர்களில் இதுவரை 2 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு எதிராகவும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

காசாவில் போர்நிறுத்தம், இஸ்ரேலுக்கான அமெரிக்காவின் இராணுவ உதவி மற்றும் ஆயுத விநியோகத்தை நிறுத்துதல், போரினால் பயனடையும் நிறுவனங்களில் இருந்து பல்கலைக்கழக முதலீடுகளை திரும்பப் பெறுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே மாணவர்கள் இவ்வாறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்காவின் கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தி வந்த மாணவர்களின் முகாம்களை கலவரத் தடுப்பு பொலிஸார் வலுக்கட்டாயமாக அகற்றியுள்ளனர்.

இதன்போது அங்கு போராட்டம் நடத்திய நூற்றுக் கணக்கான மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி, லாஸ் ஏஞ்சலீஸ் மாநில பல்கலைக்கழகத்திலும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஹெமில்டன் அர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டியலில் ஜெலன்ஸ்கி
# ப் நகர்த்தும் புடின்

ஜனாதிபதி விளாடிமிர்
் வழக்குப் பதிவு செய்து, அவரை
லில் வைத்துள்ளதாக தகவல்



ன்றத்தின் வழக்கறிஞர் மீதும் ரஷ்யா பிடியாணை பிறப்பித்திருந்த நிலையில் உக்ரைன் அதனை முற்றாக நிராகரித்துள்ளது.

இந்நிலையில், உக்ரைனின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், ரஷ்ய சர்வாதிகாரி விளாடிமிர் புடினுக்கு எதிராக போர் குற்றங்களை புரிந்த சந்தேகத்தின் பேரில் கைது செய்வதற்காக சர்வதேச குற்றவியல் நீதமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, குறித்த பிடியாணை சுமார் 123 நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# ஸ்தீன ஆதரவு போராட்டங்கள்
# ரம் மாணவர்கள் கைது




ங்கில் தடுப்புகள் அமைத்து மாணவர்களால் போராட்டம் மேற்கொள்ளப்பட்ட நிலையில், பொலிஸார் கடந்த புதன்கிழமை அங்கிருந்து மாணவர்களை வெளியேற்றியிருந்தனர்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட மாணவர்கள் மீது இஸ்ரேலுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தாக்குதல் நடத்திய நிலையில், இரண்டு தரப்பினரும் சுமார் 2 மணிநேரம்வரை மோதலில் ஈடுபட்டமையும் அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக சுமார் 300 மாணவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் போராட்டங்கள் தொடர்பாக அமெரிக்கா முழுவதும் இதுவரை சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அமெரிக்க அரசாங்கம் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை போராட்டங்களை கைவிடப் போதில்லை என மாணவர்கள் அறிவித்து, தொடர்ச்சியாக போராடி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## கடும் வெப்பநிலையால்
# இலட்சக்கணக்கான மீன்கள் வியட்நாமில் இறப்பு



(வியட்நாம்)

வியட்நாமில் வெப்ப அலை வீசுவதால் நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் குறைந்து இலட்சக்கணக்கான மீன்கள் இறந்துள்ளன.

வியட்நாமில் டோங்னாய் மாகாணத்தில் உள்ள 300 ஹெக்டேயர் பரப்பளவுள்ள சாங்மே நீர்த்தேக்கத்தில் இறந்த மீன்கள் சூழ்ந்து காணப்படுகின்றன.

அதாவது, கடந்த சில நாட்களில் குறைந்தது 200 தொன் மீன்கள் இறந்திருக்கலாம் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென்கிழக்கு மற்றும் தெற்காசியாவின் ஏனைய பகுதிகளைப் போலவே வியட்நாமும் கடும் வெப்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, மழை பொழிவும் குறைந்து காணப்படுகின்றது.

மீன்களின் இறப்பிற்கு அதிகரித்த வெப்பநிலை மற்றும் முறையற்ற பராமரிப்பே காரணம் என உள்ளூர் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

தற்போது நீர்த்தேக்கத்தில் இருந்து அதிகமாக துர்நாற்றம் வீசுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

"கடந்த 10 நாட்களாக துர்நாற்றம் வீசுவதால் எங்கள் வாழ்க்கை தலைகீழாக மாறிவிட்டது" என உள்ளூர்வாசி ஒருவர் தெரிவித்துள்ளார்.

டோங்னாய் மாகாணத்தில் 40 செல்சியசுக்கு வெப்பநிலை அதிகரித்துள்ளது. இரண்டு தசாப்தங்களுக்கு பிறகு அதிக வெப்பம் பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தென்கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளில் வரலாறு காணாத அளவில் வெப்ப அலை வீசுகிறது.

ஆசியா முழுவதும் வெப்பத்தின் தாக்கம் மிகவும் கொடூரமாக காணப்படுகிறது.

இது உலக கால நிலை வரலாற்றில் மிகவும் தீவிரமான நிகழ்வு என வானிலை வரலாற்றாசிரியர் மாக்சிமிலியானோ ஹெர்ரேரா தெரிவித்துள்ளார்.

வியட்நாமின் அயல் நாடான கம்போடியாவிலும் வெப்பம் அதிகரித்துள்ளது. அங்கு வெந்நிலை 43°C ஐ அடையவுள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலைகளுக்கு விடுமுறை மற்றும் தண்ணீர் பற்றாக்குறையை தடுப்பதற்கான திட்டங்களை முன்னெடுக்கத் தூண்டியது.

தாய்லாந்தில், உடோன் தானி மாகாணத்தில் வெப்பநிலை 44°C இற்கும் அதிகமாக அதிகரித்தமையினால், முன்னெப் போதும் இல்லாத அளவிற்கு மின்சாரப் பயன்பாடு அதிகரித்துள்ளது.

பிலிப்பைன்ஸில் அணையில் நீர் மட்டம் குறைந்ததால் நீரில் மூழ்கிய 300 ஆண்டுகள் பழைமையான நகரத்தின் எச்சங்கள் தென்படுகின்றன.

பங்களாதேஷில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸில் கல்வி நடவடிக்கை இணையவழி முறையில் மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை, இந்தியாவில் வெப்பம் பக்கவாதம் காரணமாக ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டு வெப்பத்தின் தாக்கம் கொடூரமாக இருக்கும் எனவும், கடந்த ஆண்டை விட வெப்பநிலை அதிகரித்து காணப்படும் எனவும் சர்வதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## களப்பன்னை/ கொஞ்சி/ ஞாயிறு வணங்கி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name- Glycosmis penlaphylla
Family- Rutuceae

வடமாகாணத்திற்குரிய முக்கிய மருத்துவ மூலிகைகளுள் களப்பன்னை முக்கியமானதாகும். செம்மண், கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் இதன் பரம்பல் அதிகம். வடமாகாணத்தில் காட்டு பிரதேசங்களில் யாழ்.மாவட்டத் தீவுப் பகுதிகளிலும் இதன் பரம்பல் அதிகம். பெருஞ்செடி அல்லது சிறிய மர இனத்தை சேர்ந்தது ஒன்றுவிட்ட இலையமைப்பு, கூட்டிலை, தனியிலையில் முடிவடையும்.

ஒழுங்கான இருபாலான வெண்ணிற சிறிய பூக்கள் கொத்தாக மலரும். வட்ட வடிவ காய்கள் பசுமையான பச்சை நிறத்தில் காணப்படும். பழுக்கும் போது இளஞ்சிவப்பாக இருக்கும். ஒன்று அல்லது இரண்டு விதைகளைக் கொண்டது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். தை தொடக்கம் சித்திரை மாதங்கள் வரை பூக்களை அவதானிக்கலாம்.

இதனுடைய இலைகள், பழங்கள், வேர்கள், வேர்ப்பட்டைகள் அனைத்துப் பகுதிகளும் மருத்துவ குணங்கள் நிறைந்தவை.

களப்பன்னை மூலிகையானது வாத நோய்கள், மூட்டு வியாதிகள், இரத்தச் சோகை, காமாலை, ஈரல் நோய்கள், சுரம், கழிச்சல் போன்ற நோய்களுக்கு சிறந்த பலனைக் கொடுக்கும்.

முக்கியமாக பிரசவித்த பெண்களுக்கு ஏற்படும் சன்னி/ இழுப்பு போன்ற நோய்களுக்கு இதன் வேர் ஓர் பாதுகாப்பு அல்லது தற்காப்பு மூலிகையாம்.

இதன் பழங்கள் சாப்பிடக் கூடியது. உடலிற்கு பலத்தையும். நோய் எதிர்ப்பாற்றலையும் கொடுக்கும். இனிப்பு கலந்த புளிப்பு சுவையைக் கொண்டது. உயிர்ச்சத்து A,C காணப்படும். இந்தப் பழங்களைப் பயன்படுத்தி ஜாம். ஊறுகாய் போன்றன தயாரித்தும் பயன்படுத்தலாம்.

இதன் இலைகளை உப்புத் தண்ணீரில் கழுவி பின்பு நல்ல நீரில் கழுவி மை போல அரைத்து 5g அளவு எடுத்து மோரில் கலக்கி காலை/ மாலை கொடுக்க வயிற்றுப் போக்கு குணமாகும்.

இலைகளைக் கழுவி அரிந்து ஒரு பங்கிற்கு நான்கு பங்கு நீர் விட்டு கால்ப் பங்காக சுண்டக்காய்ச்சி 50 மில்லி லீற்றர் அளவு காலை/ மாலை கொடுக்க காய்ச்சல் குணமாகும். ஈரலும் பலப்படும்.

இதன் இலைகளை இஞ்சிச்சாறு விட்டு அரைத்து தோலில் ஏற்படும் நமைச்சல் கரப்பன் நோய் போன்றவற்றிக்கு பூசி வரலாம்.

பிரசவித்த பெண்களுக்கு ஏற்படும் சன்னி, இழுப்பு போன்றன ஏற்படாமல் இருக்க களப்பன்னை வேரை சிறு துண்டுகளாக நறுக்கி 1 பங்கிற்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 50 மில்லி லீற்றர் காலை/மாலை 7 நாட்கள் தொடர்ந்து கொடுத்து வர மேற்படி நிலைமைகள் வராமல் தடுக்கலாம்.

களப்பன்னை இலை,வேர், கருஞ்சீரகம் ஒவ்வொன்றும் சமஎடை எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30 தொடக்கம் 60 மில்லி லீற்றர் அளவு தினமும் எடுத்துவர தேகபலம் அதிகரித்து மூட்டுக்கள் பலம் பெறும், உடல் உஷ்ணத்தை ஏற்படுத்தும்.

களப்பன்னை வேர், இஞ்சி தட்டி நீர் விட்டு கொதிக்க வைத்து வடித்து பனங்கற்கண்டு அளவாக சேர்த்து புதினா இலையையும்சேர்த்து தேநீர் போல தயாரித்து பருகிவர உடலில் அதிகரித்த பித்தம் தணியும். குடற் புண்ணையும் ஆற்றக் கூடியது.

களப்பன்னை வேர், இலவங்கம் வேர் இரண்டையும் சம அளவு எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 50 மில்லி லீற்றர் காலை, மாலை அருந்தி வர கோழை (சளி), வாத நோய், இருமல் குணமாகும்.

களப்பன்னையின் வேர்ப்பட்டை 35 கிராம் எடுத்து தட்டி ஒரு வானலியில் இட்டு 450 மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெய் சேர்த்து காய்ச்சி பதத்தில் இறக்கி வாத நோய்க்கு, மூட்டு வியாதிகளுக்கு வெளிப் பிரயோகமாக பூசலாம்.

சிவத்தப் பச்சரிசியை நனைய விட்டு வடித்து களப்பன்னை இலைகளையும் சேர்த்து இடித்து மாவாக்கி அரைவாசி மாவை மூட்டுக்களின் வலி, வீக்கம் இருந்தால் புளியம் இலை அவித்த நீரில் மேற்படி மாவை குழைத்து வலியுள்ள மூட்டுக்களில் புக்கை போல் கட்டி, மீதி மாவை களிக்கிண்டி சாப்பிட்டு வர மூட்டு வியாதிகள் தணியும்.

களப்பன்னையின் குச்சிகளை பற்தூரிகையாக பயன்படுத்த பல் ஈறுகளில் இருந்து இரத்தம் கசிவதை நிறுத்தி, பற்களை வெண்மையாகவும், கெட்டியாகவும் வைத்திருக்க உதவும்.



களப்பன்னை இலை, வெற்றிலைக் காம்பு, வாய்விடங்கம், வல்லாரைக் காம்பு இவை ஒவ்வொன்றையும் சம அளவாக எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 50 மில்லி லீற்றர் காலை, மாலை 5 நாட்களுக்கு தொடர்ச்சியாகக் கொடுக்க குடற்புழுக்கள் நீங்கும். சிறியவர்களுக்கு 15 தொடக்கம் 30 மில்லி லீற்றர் அளவு கொடுக்கலாம்.

உளுத்தம் பருப்பை நனையவிட்டு வடித்து அதனுடன் களப்பன்னை இலைகளை சேர்த்து அரைத்து, வறுத்த ரவை தேவையான அளவு உப்பும் சேர்த்து தோசையாக தயாரித்து உண்டு வர மூட்டு வியாதிகள் குணமுடையும்.

களப்பன்னை இலைகளையும், முக்கால் வாசி பழுத்த பழங்களையும் பயன்படுத்தி சூப் தயாரித்து பருகி வர உடலிற்குபலத்தை கொடுத்து, வயிற்று பொருமலை நீக்கி, பசியை தூண்டக் கூடியதாகவும், மூட்டு வியாதிகளையும் குணமடையச் செய்யும்.

**சூப் தயாரிக்கும் முறை**

களப்பன்னை இலைகளை சிறிதாக அரிந்து-2 கைப்பிடி, 15 சின்ன வெங்காயம், 5 பல் உள்ளி, மிளகுத்தூள்-1/4 தேக்கரண்டி,சீரகத்தூள்-1/2 தேக்கரண்டி, உப்பு தேவையான அளவு.

400 மில்லி லீற்றர் நீரை வானலியில் விட்டு கொதிக்கவிட்டு அதில் உள்ளி, வெங்காயத்தை தட்டி போட்டு, அதனுள் சிறிதாக அரிந்த களப்பன்னை இலைகளை போட்டு கொதித்த பின்பு, சீரகத் தூள், மிளகுத்தூள், உப்பும் சேர்த்து 5-10 நிமிடங்கள் நெருப்பில் கொதிக்க வைத்து இளஞ்சூட்டில் பருகலாம்.

# இன்று ஒரு தகவல் 115



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பெற்றோரும் பிள்ளைகளும்

அப்பாவை விட பிள்ளைகள் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். பொதுவாக பல சந்தர்ப்பங்களிலே இதை நாம் பார்த்திரு க்கின் றோம். இது சம்பந்தமான ஆய்வு ஒன்று அண் மையிலே நடந்தது.

ஹைதராபாத்துலே தேசிய மன வளர்ச்சி குன்றியோருக்கான அமைப்பு என்று ஒன்று.தேசிய ஊட்டச்சத்து தொடர்பான அமைப்பு என்று ஒன்று. அது இரண்டு அமைப்பும் இணைந்து ஒரு ஆய்வு நடத்தினார்கள். ஹைதராபாத் நகரத்தை சுற்றியுள்ள கிராமங்களிலே இந்த ஆய்வு நடந்தது. ஏராளமான இளைஞர்கள், இளம் பெண்கள், பெற்றோர்கள் இவர்களையெல்லாம் நேரடியாக போய் சந்தித்தார்கள். புள்ளி விவரங்களை சேகரித்தார்கள். அதை எல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது பல உண்மைகள் தெரிய வந்தது. 30 வயதிற்கு குறைவானவர்களை விட 30 இல் இருந்து 50 வயது வரைக்கும் உள்ளவர்களிடம் புத்திசாலித்தனம் அதிகமாக இருக்குமாம்.

30 வயதிற்கு மேலே உள்ள பிள்ளைகள் அப்பா அம்மாவை விட அதிக புத்திசாலிகளாக உள்ளார்களாம். 30 வயதிற்கு கீழே இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படிப்பட்ட பிள்ளைகளுடைய புத்திசாலித்தனமும் அவர்களை பெற்றவர்களுடைய புத்திசாலித் தனமும் கிட்டத்தட்ட சமமாகவே இருக் குமாம். இது வரைக்கும் நான் பிள்ளைகள் என்று சொன்னது எல்லாம் ஆண் பிள்ளைகள்.

பெண் பிள்ளைகள் எப்படித் தெரியுமா? 30 வயதிற்கும் குறைவான பெண்களிடம் அவர்களை பெற்றவர்களை விட புத்திசாலித்தனம் குறைவாகவே இருக்குமாம். ஓரளவு நல்ல வருவாய் உள்ள குடும்பம் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அங்கே எல்லாம் பெற்றோர்களை விட பிள்ளைகள் அவர்கள் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி புத்திசாலிகளாக இருப்பார்கள்.

வருவாய் குறைச்சலாக உள்ள குடும்பங்களிலே இப்படி இல்லை; அது கொஞ்சம் வித்தியாசப்படும். வருவாய் குறைவாக உள்ள குடும்பங்களிலே புதல்விகளின் புத்திசாலித்தனம் மந்தமாக இருக்குமாம். அப்புறம் இன்னும் ஒரு ஆய்வு நடந்திரு க்கிறது. அதாவது பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் உயரத்திலே ஏதாவது சம்மந்தம் இருக்கிறதா? என்று கண்டுபிடிப்பதற்காக. பொதுவாக தந்தையை விட மகன்கள் உயரமாக இருக்கிறார்களாம். தாயும் மகள்களும் கிட்டத்தட்ட சம உயரம் தான் இருக்கிறார்களாம்.

30 இல் இருந்து 50 வயது வரைக்கும் உள்ள ஆண்கள் அவர்கள் பெற்றோர்களை விட அதிக உயரம். 20 இல் இருந்து 30 வரைக்கும் உள்ள இளைஞர்களின் உயரமும் அவர்களின் பெற்றோர்களின் உயரமும் கிட்டத்தட்ட சமமாம். இது எல்லாம் அந்த ஆய்வில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ள முடிவுகள்.

இதைக் கேட்டுக் கொண்டிருக்கின்ற சின்னப்பிள்ளைகள் எல்லாம் கொஞ்சம் கோபமாக பார்ப்பது போல் தெரியுது. இது வரைக்கும் நீங்கள் சொல்லிக்கொண்டு வந்ததெல்லாம் 20 வயதிற்கும் மேலே உள்ளவர்களைப் பற்றித்தான். 10 வயதிற்கு கீழே உள்ள எங்களைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே என்றார்கள் அப்படித்தானே. அது தான் ஆரம்பத்திலே கூறினேனே.. அப்பாவை விட பிள்ளைகள் புத்திசாலிகள் என்று! அது உங்களுக்குத் தான்.

உங்களைப் போல் இரண்டு பிள்ளைகள் என்ன பேசிக் கொண்டார்கள் தெரியுமா? அவர்கள் இரண்டு பேருமே கணக்கில் மார்க் நூறிற்கு நூறு. ஒரு பையன் அடுத்தவனிடம், நீ எப்படி கணக்கில் நூறிற்கு நூறு வாங்கினாய் என்று கேட்டான். அதுக்கு இவன், நான் கணக்கிலே சந்தேகம் வந்தால் வீட்டில் எனது அப்பாவிடம் கேட்பேன் அது தான் காரணம்! என்றான். அது சரி நீ எப்படி நூறிற்கு நூறு வாங்கினாய்? என்று கேட்டான் இவன்.

இதுக்கு அவன், நான் கணக்கிலே சந்தேகம் வந்தால் எனது அப்பாவிடம் கேட்பதில்லை! அதனாலே தான் நூறிற்கு நூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 100 | 120-150 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 60 | 150 | 120 |
| தக்காளி | 160 | 140 | 100 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 100-140 | 160 |
| கோவா | 160 | 160 | 150 | 150 | 200 |
| கரட் | 300 | 240 | 200 | 200 | 250 |
| பூசணி | 80 | 120 | 140 | 80-100 | 80 |
| புடோல் | 100 | 200 | 200 | 100 | 110 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 320 | 120 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 350 | 350 | 170 | 300 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 250 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 150 | 150-200 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 100 | -- | 150 |
| பயற்றங்காய் | 150 | 150 | 180 | 180-230 | 100 |
| லீக்ஸ் | 250 | 250 | 220 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 150 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 150 | 150 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 700 | 750 | 800 | 300-600 | 600 |
| போஞ்சி | 200 | 350 | 300 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 80 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 40-70 | 120 |
| தேசிக்காய் | 1000 | 800 | 800 | 800-1300 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 100 | 50-90 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 300 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 60 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | -- | 100 | -- |

# மதுபோதையில் சாரத்தியம் வவுனியாவில் இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இரு சாரதியினை கடந்த வியாழக்கிழமை வவுனியா போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை தடுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போது மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் பாரவூர்தி மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகிய இரு வாகனங்களின் சாரதியினை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் செலுத்தி சென்ற இரு வாகனங்களும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையுடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளும் நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-250)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட அறுவர் கைது

(கரணவாய்)

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட அறுவர் வெற்றிலைக்கேணி கடற்படையினரால் கைது. வடமராட்சி கிழக்குச் சாலை கடற்பகுதியில் வெற்றிலைக் கேணி கடற்படையின் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அறுவர் மூன்று படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்கள் உடமைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (நி-6-60)

# கிணற்றில் வீழ்ந்த யானைக்குட்டி மீட்பு

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் கந்தசுவாமி நகர் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் யானைக்குட்டி ஒன்று வீழ்ந்துள்ளது. சில மணி நேரங்களின் பின்னர் கிணற்றில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டு காட்டுக்குள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (நி-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3108

### மேஷாக்

செய்திகள்: வெளியே அனல் காற்று வீசுவதால் வெளியே செல்வதை தவிர்க்கவும்



வீட்டுக்குள்ள மட்டும் என்ன பனியாடா பெய்யுது. அதுக்கு மேல எரியுது

### ராகவி

In school days


இப்போ நான் last bench இல் படுத்து தூங்குவனாம்




சேர் வந்து கேட்டால் அவனுக்கு உடம்பு சரியில்லை அது தான் தூங்குறான் என்று சொல்லுவியாம்

### ஷாத்ராக்

இருக்கு இந்த வீட்டில பேய் இருக்கு



சாமி மெதுவா பேசுங்க அப்புறம் அது எனக்கு சோறு கூட போடாது

### சைத்தா

பைக்கு பெற்றோலில் ஓடுது
டிவி கரண்ட்ல ஓடுது
காரு டீசலில் ஓடுது



ஆனா நம்ம வாழ்க்கை
மட்டும் கடனிலயே ஓடுது

### டெனின்

பூரியின் சுவை அறிந்தவனை விட



பூரிக்கட்டையின் வலி அறிந்தவனே அதிகம்

### அக்சி

ஒருவர் நம்மை சிரிக்க வைப்பதால்
அவர் கோமாளியும் அல்ல



அதே சமயம் ஒருவரை எளிதில் கேலி
செய்வதால் நாம் மேதாவியும் அல்ல

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர் ... பதிவு பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 473





கப்பல் நகராமல் நின்ற நிலையில் நிற்பதாகத் தோன்றியது. புழுக்கம் இன்னும் அதிகமாயிற்று. தாகம் மிகுந்து நாவும் தொண்டையும் வறண்டன. ஏது? இனி வெகு நேரம் பொறுக்க முடியாது. கத்தியை எட்டி எடுத்து, கட்டுக்களை அறுத்து கொண்டு, புறப்பட்டுப் போய்ப் பார்க்க வேண்டியதுதான். கப்பலில் எங்கேயாவது குடி தண்ணீர் வைத்திராமலா இருப்பார்கள்?

வந்தியத்தேவன் சுற்று முற்றும் பார்த்தான். ஒரு மூலையில் சில தேங்காய்கள் கிடந்தன. ஆகா! வெண்ணெய் இருக்க நெய்க்கு அழுவானேன்? அந்தத் தேங்காய்களைக் கொண்டு பசி, தாகம் இரண்டையும் தீர்த்துக் கொள்ளலாமே? கையின் கட்டுக்களை வந்தியத்தேவன் நன்றாய்த் தளர்த்தி விட்டுக்கொண்டான். கத்தியை எட்டி எடுக்கக் கையை நீட்டியும் விட்டான். அச்சமயம் காலடிச் சத்தம் கேட்டது. கதவு திறக்கும் சத்தமும் கேட்டது. நீட்டிய கையை மடக்கிக் கொண்டான்.

முன்னொரு தடவை வந்து விட்டுப் போன மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய தோழனும் உள்ளே வந்தார்கள். இருவரும் வந்தியத் தேவனுக்கு இரு புறத்திலும் நின்று கொண்டார்கள்.

"கப்பல் பிரயாணம் எப்படி, அப்பா! சுகமாயிருக்கிறதா?" என்று ரவிதாஸன் கேட்டான்.

வந்தியத்தேவன், "தாகம் கொல்லுகிறது கொஞ்சம் தண்ணீர்!" என்று பேச முடியாமல் பேசினான்.

"ஆ! எங்களுக்கும் தாகந் தான். அந்தப் பாவிகள் கப்பலில் தண்ணீர் வைக்கவில்லையே?" என்றான் ரவிதாஸன்.

"காளிக்கு எல்லாரையும் விட அதிக தாகமாயிருக்கிறது. இரத்த தாகம்!" என்றான் இன்னொருவன்.

வந்தியத்தேவன், திரும்பி அவனை உற்றுப் பார்த்தான். "என்னை ஞாபகமில்லையா, தம்பி! மறந்துவிட்டாயா? கடம்பூர் அரண்மனையில் குரவைக் கூத்துக்குப் பிறகு தேவராளன் வந்து வெறியாட்டம் ஆடினானே? 'காளித் தாய் பலி கேட்கிறாள் ஆயிரம் வருடத்து அரச குல இரத்தம் கேட்கிறாள்' என்று ஆவேசம் வந்து சொன்னானே?"

"ஆ! இப்போது ஞாபகம் வருகிறது! "நீதான் அந்தத் தேவராளன்!" என்று வந்தியத்தேவன் முணுமுணுத்தான்.

"ஆமாம் நான்தான்! ஆயிரம் வருடத்து அரசகுமாரனைக் காளிக்குப் பலி கொடுக்கலாம் என்றுதான் இலங்கைக்கு வந்தோம் அது சாத்தியப்படவில்லை. அந்த வீர வைஷ்ணவனை வைகுண்டத்துக்கு அனுப்பப் பார்த்தோம் அதுவும் முடியவில்லை. நீயாவது வலுவில் வந்து சேர்ந்தாயே? மிக்க சந்தோஷம். இப்போதைக்குக் குறுநில மன்னர் குலத்து இரத்தத்தோடு காளி திருப்தியடைய வேண்டியதுதான்!" என்றான் தேவராளன்.

"அப்படியானால் ஏன் தாமதிக்கிறீர்கள்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"வீர வாலிபனாகிய உன்னைக் கண்ட இடத்தில் பலி கொடுத்து விடலாமா! கரை சேர்ந்த பிறகு எல்லாப் பூசாரிகளையும் அழைத்து உற்சவம் கொண்டாடியல்லவா பலி கொடுக்கவேண்டும்? முக்கியமாகப் பூசாரிணி வரவேண்டுமே?"

"பூசாரிணி யார்?"

"யார் என்று உனக்குத் தெரியாதா? பழுவூர் இளையராணிதான்."

வந்தியத்தேவன் சிறிது யோசித்துவிட்டு, "உங்களுக்கு உண்மையில் அத்தகைய எண்ணம் இருந்தால் உடனே கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள். இல்லாவிடில் இங்கேயே தாகத்தினால் செத்துப்போவேன்!" என்றான்.

"தண்ணீர் இல்லையே, தம்பி!" (தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## அச்சம்

ஒரு மடத்தில் துறவி ஒருவர் இருந்தார். நிறைய சீடர்கள் அவரிடம் கல்வி கற்று வந்தனர்.

சீடர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த அவர், "எல்லாத் தீமைகளுக்கும் அச்சம்தான் அடிப்படைக் காரணம் அச்சத்தால் வெறுப்பு வருகிறது பகை ஏற்படுகிறது. பேராசை உண்டாகிறது. அதனால் நாம் எந்தச் சூழலிலும் அச்சப்படக் கூடாது," என்றார்.

குறுக்கிட்ட சீடர் ஒருவர், "ஐயா! அச்சத்தால் பேராசை உண்டாகும் என்கிறீர்கள். இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை," என்றார். அதற்கு அவர் பதில் ஏதும் சொல்லவில்லை.



அன்றிரவு வழக்கம் போலத் துறவியும் சீடர்களும் உணவு உண்ண அமர்ந்தனர்.

அப்போது துறவியிடம் வந்த சமையல் காரர், "மடத்தில் அரிசி தீர்ந்து விட்டதை நான் கவனிக்கவில்லை.

இருந்த அரிசியை வைத்து இரவு சமையலை முடித்துவிட்டேன். நாளை நகரத்திற்குச் சென்று அரிசி வாங்கி வந்தால்தான், சமையல் செய்ய முடியும். நண்பகலில் தான் உணவு தயாராகும். காலை உணவு சமைக்க வழி இல்லை, என்றார்.

பிறகு அவர் எல்லாருக்கும் உணவு பரிமாறினார். துறவியும், சீடர்களும் உண்டு முடித்தனர். சீடர்களைப் பார்த்து துறவி, "இன்று நீங்கள் அனைவரும் வழக்கத்தை விட அதிகமாகச் சாப்பிட்டு உள்ளீர்கள் ஏன்?" என்று கேட்டார்.

"நாளை காலையில் உணவு கிடையாது என்று சமையல் காரர் சொன்னார்.

காலையில் பட்டினி கிடக்க வேண்டி இருக்கும். அதனால், இப்போது அதிகமாகச் சாப்பிட்டு விட்டோம், என்றார் சீடர்களில் ஒருவன்.

"நாளை காலையில் உணவு கிடைக்காது என்று அச்சம் கொண்டீர்கள். அதனால் வழக்கத்தை விட அதிகமாகச் சாப்பிட்டீர்கள். அச்சத்தால் பேராசை வரும் என்பதை இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள் அல்லவா?" என்றார் துறவி.

பாடம் : அச்சத்தால் பேராசை வரும் என்பதை ஒப்புக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை சரியாக உணரும்பொழுது வீணான எண்ணங்கள் என்னும் விலங்கிலிருந்து விடுபட முடியும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீங்கள் எடுக்கும் முடிவை தமிழ் மக்கள் ஏற்பார்களா?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என ஒரு தரப்பு முடிவு செய்துள்ளதாக அறிய முடிகிறது.

ஒரு குறிப்பிட்ட சிவில் அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் பொது வேட்பாளரை நியமிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றன.

ஆனால் இந்த முடிவு மிகப் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

அதாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை சிவில் சமூக அமைப்புகளில் ஒரு தரப்பும் தமிழ் அரசியல் கட்சிகளில் ஒரு பகுதியினரும் கூடி முடிவெடுப்பதென்பது அவர்களைப் பொறுத்தவரை சரியாக இருக்கலாம்.

ஆனால் இவ்வாறு எடுக்கப்பட்ட முடிவுக்கு தமிழ் மக்கள் தமது ஆதரவை வழங்குவார்களா? என்பதுதான் நம் கேள்வி.

ஆம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அரசியல் தொடர்பில் மிகுந்த தெளிவைக் கொண்டுள்ளனர்.

தவிர, தமிழ் அரசியல் கட்சிகளின் இயலளவு, அவர்களின் அரசியல் வியூகம், அவர்களின் செயற்பாடுகள் என்பன தொடர்பில் தமிழ் மக்கள் உயர்ந்த பட்டறிவைப் பெற்றுள்ளனர்.

எனவே முன்புபோல இப்போதும் தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் சிவில் அமைப்புகளும் எடுக்கின்ற முடிவை அப்படியே தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என யார் நம்பினாலும் அவர்கள் சமகால நிலைமைகளைப் புரியத் தவறியவர்கள் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

ஆக, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிப்பதா? இல்லையா? என்ற முடிவை தமிழ் மக்கள் எடுக்க வேண்டும்.

அவ்விதம் குறித்த தீர்மானத்தைத் தமிழ் மக்கள் எடுக்கும்போதுதான், ஒட்டுமொத்த வாக்குகளும் குறித்த இலக்கை நோக்கிப் பிரயோகிக்கப்படும்.

இதைவிடுத்து ஒரு தரப்பு அரசியல் கட்சிகள் மற்றும் ஒரு தரப்பு சிவில் அமைப்புகள் கூடி, தங்கள் பாட்டில் தீர்மானத்தை எடுத்து பொது வேட்பாளரை நியமிக்க; அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கத் தவறினால், நிலைமை என்னவாகும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

எனவே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எந்த முடிவை எடுப்பதாக இருந்தாலும் அது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களதும் கருத்தாக இருப்பதுதான் மிகவும் அவசியமானது.

எனவே பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டும் எனத் தீர்மானம் எடுக்கின்ற அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் தமிழ் மக்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இச் சந்திப்புகள் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், அரச பணியாளர்கள், விவசாய அமைப்புகள், கடற்றொழில் சங்கங்கள் என்றவாறு விரிவுபடும்போது, அவை பொதுமக்களின் கருத்துக்களாக அமையும் என்பதுதான் நம் கருத்து.

# தமிழ்ப் பொது வேட்பாளர் என்பதை பிரபாகரன் கூட ஏற்கமாட்டார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழ்ப் பொது வேட்பாளர் முறைமை யதார்த்தமற்ற உள்நோக்கம் மற்றும் சுயலாபம் கொண்ட ஒன்றாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இருந்திருந்தால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமிருக்காது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

சில தமிழ்க் கட்சிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்தைத் தற்போது முன்னெடுத்து வருகின்றன. இதில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை. அது சரியானதும் நியாயமானதுமாக நான் கருதவில்லை. கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்பவர்கள் தங்களது சுயலாபங்களுக்காகத் தீர்க்க முடியாத பிரச்சினைகளைத் தூக்கிப் பிடித்து வந்தனர்.

அவர்கள் தமிழ்ச் சமூகத்துக்கு ஏற்ற நடைமுறைக்கு சாத்தியமான யதார்த்த முடிவுகளை எடுக்க வேண்டும். தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் அரசியல் உள்நோக்கம் கொண்ட சுயலாபம் கொண்டதாகும்.

முக்கிய மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களுடன் எமது மக்களது பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடி, அதன் பின்பு ஓர் உத்தரவாதத்தைத் ஏற்படுத்திக்கொள்ள நாம் அவர்களை இணங்க வைக்க வேண்டும். தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது ஒரு பொய்த்தனம்.

பிரபாகரன் உயிரோடு இருந்திருந்தால் பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமிருந்திருக்காது என்றார். (ந-7.10)

# வட மாகாணத்தில் தற்போது போதைப்பொருள் சவாலாக உள்ளது

## வடக்கு ஆளுநர் கருத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள்பாவனை ஒரு சவாலான விடயமாக உள்ளது. இதனை சீர்செய்ய வெறுமனே போதைப் பொருளுக்கு எதிரான பிரசாரங்கள் மட்டும் போதாது. மாறாக இளைஞர், யுவதிகளை மாற்றுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் திறன்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் மது போதைக்கு எதிரான இயக்கம் நேற்று நடாத்திய விழிப்புணர்வுக் கருத்தரங்கின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்துகொண்டார்.

மதுசாரம் மற்றும் போதைப் பொருள் பாவனையால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும், சவால்களும் என்ற தொனிப்பொருளில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள்பாவனை ஒரு சவாலான விடயமாக காணப்படுவதாக இதன் போது உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார். போதைப் பொருள் பாவனையால் பெண்கள் அதிகளவில் சவால்களை எதிர்நோக்குவதாக தெரிவித்த ஆளுநர், இந்நிலையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் கூறினார்.

போதைபொருளுக்கு எதிரான பிரசாரங்களை செய்வதைவிடுத்து, இளைஞர், யுவதிகளை மாற்றுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் திறன்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். இதற்காக தனது பணிப்புரைக்கு அமைய வடக்கு மாகாண விளையாட்டுத்துறை மற்றும் கலாசார திணைக்களம் ஆகியன இணைந்து கிராமிய மட்டத்தில் புதிய செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் வழங்கப்படும் போது சிறந்த மாற்றங்களை எதிர்பார்க்க முடியும் எனவும் ஆளுநர் கூறினார்.

அதற்கமைய நிலையான பொருளாதாரத்தை பெற்றுக்கொள்வதற்கான புதிய திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் போதைப்பொருளானது குடும்பங்களின் அடிப்படையை சிதைத்துக் கொண்டிருக்கும் நிலையில் , அதற்கு எதிராகச் செயற்பட அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஆளுநர் கேட்டுக் கொண்டார். (ந-7.10)

# 2022 - சா.தரப் பரீட்சை மீளாய்வு வெளியாகியது

www.doenets.lk எனும் இணையத்தள முகவரி ஊடாக மீளாய்வு பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பரீட்சைப் பெறுபேறுகள் மீளாய்விற்காக 49 ஆயிரத்து 312 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

0112 784 537, 0112 784 208, 0113 188 350 மற்றும் 0113 140 314 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மேலதிக தகவல்களை பெற்றுகொள்ள முடியும் எனவும் திணைக்களம் அறிவித்துள்ளது.(ந-7,10)

# திருநெல்வேலியில் பஞ்சரத பவனி

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீநீலாயதக்ஷி அம்மன் சமேத ஸ்ரீ காயாரோஹணேஸ்வர சுவாமி ஆலய பஞ்சரத இரதோற்சவமானது இன்று காலை 8.00 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இன்று அதிகாலை விசேட அபிஷேகம் கொடித்தம்ப பூஜை என்பனவற்றை தொடர்ந்து காலை 7.00 மணியளவில் வசந்த மண்டப பூஜை இடம் பெற்று தியாகராஜ சுவாமி உள்ளடங்கலாக பஞ்சமூர்த்திகள் ரதங்களில் ஆரோகித்து தொடர்ந்து பஞ்சரத பவனி இடம்பெறும். (ந-7,10)

# பேராசிரியர் இராஜேஸ்வரன் காலமானார்

யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்றுறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் S.T.B. இராஜேஸ்வரன் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

1977ல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது புவியியல் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற அவர், 1977 முதல் 1978 வரை பேராதனைப் பல்கலைக்கழக புவியியற்றுறையில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

பின்னர் 1979 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியியற்றுறையில் இணைந்து கொண்டார்.

புவி வெளியுருவவியலிலும், படவரைகலையிலும், நிலப்பயன்பாட்டு திட்டமிடலிலும் தன்னுடைய சிறப்புத்துவத்தையும் கொண்டிருந்த பேராசிரியர் இராஜேஸ்வரன் இத்துறைகளில் பல ஆய்வு வெளியீடுகளை மேற்கொண்டிருந்தார்.

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது புவியியல் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினைப் பூர்த்தி செய்து, பின்னர் நெதர்லாந்து நாட்டில் உள்ள விமான அளவீடு மற்றும் புவிவிஞ்ஞானங்களுக்கான சர்வதேச நிறுவனத்தில் தன்னுடைய பட்டப்பின் டிப்ளோமாவையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தனது முதுமாணியையும் கலாநிதி பட்டத்தினையும் நிறைவு செய்தார்.

2011 ம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுவரை புவியியல் துறையின் தலைவராக கடமையாற்றிய பேராசிரியர் இராஜேஸ்வரன், சிரேஸ்ட மாணவ ஆலோசகராகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணைப்பாளராகவும் கடமை புரிந்தார். (ந-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு

## அரச மருந்தாளர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**நீரிழிவு, புற்றுநோய், இருதய நோய்கள் உள்ளிட்ட பல நோய்களுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு, தட்டுப்பாடு காணப்படுவதாக அரச மருந்தாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**



இதனால் நோயாளர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அரச மருந்தாளர்கள் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்துள்ளார்.

மருத்துமனைகளில் இதுவரையில் 20 வீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுதாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அதற்கு மாற்று மருந்துகள் நாட்டில் உள்ளதாகவும் மருத்துமனைகளில் அரிதாக தேவைப்படும் 115 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடுகள் நிலவுவதாகவும், அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நிதி மற்றும் அனுமதிகளை மருத்துவமனைகளுக்கு பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# பொதுவேட்பாளரை களமிறக்குவது

## தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரவே

### சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்குவது வடக்கு- கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை கொள்கை ரீதியாக வெளிப்படுத்தவே என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

பொது வேட்பாளர் என்பது வேட்பாளருடைய முகம் அல்ல அங்கு வேட்பாளராக நிறுத்தப்படுவது தமிழர்களுடைய தேசிய கொள்கைகள் அவை வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை கொள்கை ரீதியாக வெளிப்படுத்தவே என தெரிவித்தார். (நி-6)



யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனின் மணிவிழா நேற்று முன்தினம் நெல்லியடி நெல்லை முருகன் ஆலயத்தில் இடம்பெற்றது. (படம்-மகாலிங்கம்)

# வடக்கு,கிழக்கில் கண்ணிவெடி அகற்றுவதற்கு இன்னும் 23 சதுர கிலோ மீற்றர்களே எஞ்சியுள்ளன

## தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்தின் பணிப்பாளர் தெரிவிப்பு

(ஜெனீவா)

வடக்கு, கிழக்கில் கண்ணிவெடி அகற்றுவதற்கு இன்னும் 23 சதுர கிலோ மீற்றர்களே எஞ்சியுள்ளன என மனிதாபிமான கண்ணிவெடி ஒழிப்பு தொடர்பான சர்வதேச மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு, இலங்கையின் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு குறித்தும் இந்த மாநாட்டில் பாராட்டப்பட்டுள்ளது.

இந்த மாநாடு சுவிற்ஸ்லாந்தின் ஜெனீவாவில் உள்ள சர்வதேச மாநாட்டு மையத்தில் கடந்த ஏப்ரல் 29 முதல் மே 1 வரை நடைபெற்றது.

இந்த மாநாட்டில் 130 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலுக்கான ஜெனீவா சர்வதேச மையம் மற்றும் ஐக்கிய நாடுகளின் கண்ணிவெடி நடவடிக்கைக்கான ஒருங்கிணைந்த ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரும் தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்தின் பணிப்பாளருமான டபிள்யூ.எஸ். சத்யானந்த மற்றும் பிரதிப் பணிப்பாளர் வி.பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தற்போது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஒரு சதுரகிலோமீற்றர் தூரத்தில் 3000இற்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும், அடுத்த 3 வருடங்களில் இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்றுவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும் இன்னும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் 23 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் மாத்திரமே கண்ணிவெடிகள் அகற்றப்படவிருக்கிறது எனவும் இந்த மாநாட்டில் சத்யானந்த சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# பாராளுமன்ற கட்டடத்தை புனரமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற கட்டடத்தை புனரமைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடம் சேதமடைந்துள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பில் நேற்றுக் காலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (நி-6)

# 14மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தனியார் வாகனங்கள் இதுவரை இறக்குமதி

## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியில் 14 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான, தனியார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையின்படி, இந்த ஆண்டு ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையில் 14.4 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தனியார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், மார்ச் மாதத்தில் மட்டும் இறக்குமதி செய்யப்பட்ட தனியார் வாகனங்களின் பெறுமதி 4.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களுக்கு மேலதிகமாக, ஜனவரி முதல் மார்ச் வரையிலான மூன்று மாதங்களில் 102.6 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான காய்கறிகள் (மைசூர் பருப்பு, வெங்காயம், உருளைக் கிழங்கு, பருப்பு வகைகள் மற்றும் பிற காய்கறிகள்) இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மேலும் அந்தக் காலப் பகுதியில் 34.8 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மசாலாப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றுக்குள்...

நேற்று முன்தினம் மாலை அவரை காணாது தேடிய வேளை அவர் அப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் காணப்பட்டதை அடுத்து அவரை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இம்மரணம் தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ந-7,10,60)

## சா.தரப் பரீட்சை...

டுள்ளது.

அதன் பிரகாரம் 2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையை இன்று முதல் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மேலும் இம்முறை 3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 65 ஆயிரத்து 331 தனிப்பட்ட விண்ணப்பதாரர்களுமாக மொத்தமாக 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சார்த்திகள் நாடளாவிய ரீதியில் 3ஆயிரத்து 527 பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதேவேளை விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்காக விசேட பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டையுடனும் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடனும் பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னராகவே பரீட்சை மண்டபங்களுக்கு சமுகம் அளிக்க வேண்டும்.

இம்முறை பரீட்சார்த்திகள் உடற் பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்படவுள்ளதோடு பரீட்சார்த்திகள் தேவையற்ற இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் தொலைபேசி என்பனவற்றுடன் சமுகம் அளிப்பதனை தவிர்க்குமாறும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார். (ந-7,10)

## தெல்லிப்பழையில்...

எதிர்நோக்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் உள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்ட பெண்ணொருவரின் சடலம் தொடர்பில், கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழைப் பகுதியின் வீடொன்றில் இருந்து சந்தேகத்திற்கு இடமான முறையில் உயிரிழந்த பெண்ணின் சடலமொன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டிருந்தது.

அதேநேரம், சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின், 16 வயதுடைய மகன் தலைமறைவாகியுள்ளார்.

இந்நிலையில், அவர் தொடர்ந்தும் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார்.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் மகன், "மொபைல் கேம்ஸ்" எனப்படும் கைபேசி விளையாட்டுக்களுக்கு அடிமையானவர் என தெரியவந்துள்ளது.

அத்துடன், 16 வயதுடைய குறித்த சிறுவன் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கலாம் எனவும், அவரது அறையில் சில வாசகங்கள் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக குறித்த 16 வயதுடைய சிறுவன் தனது தாயைக் கொலை செய்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ந-7,10)

## கஞ்சாவை...

முன்வைக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மதுபானங்கள் இல்லாத காலகட்டத்தில் சாமானியர்கள் கூட கஞ்சாவை பயன்படுத்தியதாக தெரிவித்த அவர், கஞ்சா பயன்பாடு சிறப்பான உத்வேகத்தையும் வலிமையையும் தருவதுடன் இனத்தின் வளர்ச்சியையும் தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

யுக்திய நடவடிக்கை மூலம் பொலிஸார் போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் அதனை விநியோகம் செய்பவர்களை தேடி கைது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள நிலையில் சௌரதன தே[illegible] ளார். (ந-7,10)

## 2025ஆம்...

களை வலுப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் வருமானத்தை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி கூறியுள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த பொருளாதார விளக்க அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, 2027 ஆம் ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதத்தைக் கடந்து வருவாய் இலக்குகளை அடைவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தனிநபர் வருமான வரியின் பொருட்டு தனி நபர்களின் பதிவுகளை கட்டாயமாக்குதல், அதிக சொத்துக்கள் கொண்ட வரி செலுத்துவோர் மற்றும் வரி செலுத்துவோர் அலகுகளை வலுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, வருவாய் நிர்வாகம் மற்றும் மேலாண்மை தகவல் அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட மதிப்பு கூட்டப்பட்ட வரி முறையை ஒழித்தல் என்பன நிறுவனங்களின் வருவாய் நிர்வாக நடவடிக்கைகளை மேம்படுத்தும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ந-7,10)

## கேதீச்...

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பாரம்பரியமாக கொடிச்சீலையை வடிவமைப்பவர்களான திருநெல்வேலி, கென்னடி வீதியிலுள்ள சண்முகநாதன் கபிலன் குடும்பத்தினரிடம் காளாஞ்சி கையளிக்கப்பட்டது.

அத்துடன், பெருந்திருவிழாவுக்கான விஞ்ஞாபனமும் கையளிக்கப்பட்டது.

திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்[illegible] (ந-7,10)

## பலத்த...

அலைகளின் உயரம் 2.5 தொடக்கம் 3.0 மற்றும் அலையின் கால அளவு 12 தொடக்கம் 16 வினாடிகள் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பில் இருந்து காலி ஊடாக மாத்தறை வரையில் கடல் அலைகள் நிலத்தை நோக்கி வருவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே கல்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பு அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படக்கூடும்.

எனவே கடற்றொழிலாளர்களை அவதானமாக செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ந-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.05.05
சீட்டிழுப்பு இலக்கம் 5466
C 9 6 7 8 5 3
அத சம்பத
C 7 8 5 3
சீட்டிழுப்பு இலக்கம் 41

தன நிதானய
திகதி - 2024.05.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1496
T 22 44 47 71 T
Double Chance 29729

மெகா பவர்
திகதி 05/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1814
0 10 17 50 51 66
Double Chance 76022

லக்கி 7 VIP
திகதி 2024.05.05
சீட்டிழுப்பு இலக்கம் 0292
H 3 3 8 4 9 4 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3708
சீட்டிழுப்பு திகதி 05.05.2024
H 05 40 59 70
H 51126

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.05
சீட்டிழுப்பு இலக்கம் 0775
ரிஷபம் 22 32 49 54 ரிஷபம்
71707 06

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
05.05.2024 வெற்றி வாரம் 174 வர்ணம் பழுப்பு
G 2 8 5 4 8 3
29679 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் 21,708,040.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2440 05.05.2024 ஞாயிறு
13 46 60 71 Y
39023
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,750,660.00

சனிதா
திகதி 2024.05.05 வெற்றி வாரம் 4601
09 45 52 68 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,873,920.00
94447

சசிரி
வெற்றி வாரம் 473
சீட்டிழுப்பு திகதி 2024.05.05
02 07 47
கபிலம்
21460
ரூ.2,405,480/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4152
சீட்டிழுப்பு திகதி 2024.05.05
தினம் ஞாயிற்றுக்கிழமை
06 39 40 44 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,309,754.40
267110

X 15 45 57 60 64
1616
மஞ்சள்
05.05.2024
ஞாயிறு
570109
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 520,973,230.60

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2266
சீட்டிழுப்பு திகதி : 2024.05.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 110,798,765.60
01 21 26 59 U
765808


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0291)

076 825 7716 (ஆகாஸ்)

## மாப்பிள்ளை தேவை

- மீசாலை - புலோலி, இந்து, கௌரவகுலம், 1993, அவிட்டம், B.Sc Software Engineer, Singapore பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- புலோலி - சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம், 1990, பூசம், MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- பருத்தித்துறை - கச்சேரியடி, இந்து, கௌரவகுலம், 1978, உத்திரட்டாதி, BA, கனடா citizen, widower பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- கைதடி - அச்சுவேலி, இந்து, கௌரவகுலம், 1989, மூலம், MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- புலோலி - கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1994, திருவாதிரை, Ass. Accountant, Canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- வட்டுக்கோட்டை, இந்து, கௌரவகுலம், 1984, புனர்பூசம், Business Management, Divorce, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- காரைநகர் - அளவெட்டி, இந்து, கௌரவகுலம், 1987, ஆயில்யம், Masters of Education, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- வேலணை, இந்து, கௌரவகுலம், 1990, ரேவதி, graduate, Researcher, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- இணுவில், இந்து, கௌரவகுலம், 1995, கார்த்திகை, Bank officer, Norway பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- உரும்பிராய், இந்து, கௌரவகுலம், 1993, MSc, Canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(670)

-077 539 3728 -077 803 8193

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை.

(625)

077 88 62 927

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் ஐந்து பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. முன் பகுதி கடைத் தொகுதியாகவும் பின்பகுதி வீடாகவும் கட்டலாம். அல்லது இரண்டு துண்டாகவும் பிரிக்கலாம். A9 வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் Post office வீதியில் இருந்து 50 மீற்றர். விபரங்களிற்கு தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை

077 603 4083, 077 209 1961, 075 284 6379

(666)

## வேலையாட்கள் தேவை

யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் பிரதான வீதியில் இயங்கிவரும் பிரபல வெதுப்பகமொன்றிற்கு உற்பத்திப் பகுதியில் ஆண்களுக்கு வேலைவாய்ப்பு உண்டு. முன்அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 350 0605
076 534 3034

(654)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மன்னார் தோட்டவெளி, வேதசாட்சியர் கோவிலடி திருக்குடும்ப கன்னியர்மடம் எல்லையில் 17 பேர்ச் 3 அறைகளுடன் கூடிய வீட்டுடன் காணி விற்பனைக்கு. தரகர் தேவையில்லை. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

(659)

076 788 4176

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0295)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## V2 VISA SERVICES

கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0295)

## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

021 222 5686
076 424 7111

Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

(511)

## வீடு விற்பனைக்கு

அச்சுவேலி கதிரிப்பாயில் 5 பரப்புக் காணியில் 1500 கோழி வளர்க்கக் கூடிய கோழிப் பண்ணை, பயன்தரு மரங்கள் மற்றும் நன்னீர் கிணறுடன் கூடிய 60 அடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 934 6557

(647)

Smarter things await you

Smarter technology for all

Lenovo

At the New Lenova Experience Store in Jaffna, Srilanka.

Latest Laptops | Expert Advice | Greate Experience

Inauguration on 7th May 2024, 9.30 AM




Lenovo Experience Store
Shop No 320/B, Jaffna Point pedro Road, Aanipanthi, Jaffna, Srilanka.
Contact : 077 333 0132

(C-0286)

## JP TECHNOLOGIES

கணினித்துறையின் முன்னோடிகள்

Please Join us For The

GRAND Opening

கணினிகள், மடிக் கணினிகள், CCTV கமராக்கள், நிழற்பிரதி இயந்திரங்கள், Toner கள் மற்றும் கணினி உதிரிப் பாகங்கள் மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Monday, 6th May 2024
Time 9.30AM onwords

320/C, Jaffna - Point Pedro Rd, Aanalpanthi, Jaffna, Srilanka.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.